Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 08, 2024

திங்கட்கிழமை ஜனவரி 08, 2024 | ஒளி: 10 கதிர்: 116 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE


## ஏப்ரலில் மகிழ்ச்சி

வரி அதிகரிப்பால் சிரமத்தில் உள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், ஏப்ரல் மாதத்தில் பல பொருட்களின் மீதான வரியை குறைப்பது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், மக்கள் மீதான வரிச்சுமையால் தேர்தலின்போது, ஏற்படக்கூடிய பாதகமான சூழ்நிலையை தவிர்க்கும் வகையில் ஏப்ரலில் பல பொருட்களுக்கான சுங்க வரியை குறைப்பது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## யுவதியின் சடலத்தை தோண்டி நிர்வாணமாக்கி வீசிய அவலம்

■ ஆரியவன்ச

நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்த யுவதியின் சடலம் புதைக்கப்பட்ட பின்னர், சடலத்தை சவக்குழியில் இருந்து மீண்டும் தோண்டி எடுத்து, சடலத்தின் ஆடைகள் அத்தனையையும் கழற்றி நிர்வாணமாக விட்டுச் சென்றுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2





மன்னாரிலிருந்து இந்தியாவுக்கு

# தரை வழி

### யாழில் ஜனாதிபதி தெரிவிப்பு: மோடியுடன் பேசியுள்ளதாக கூறினார்

தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்கான நில ரீதியிலான தொடர்பை ஏற்படுத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார். யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் அண்மையில் யாழ்.ஜெட்விங் ஹோட்டலில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## “வடக்கில் சிவில் சமூகத்தில் நிலவும் சாதிப் பிரச்சினையை தீர்ப்பேன்”

வடமாகாணத்திற்கான நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் யாழ். சிவில் சமூக நிலையத்தின் தலைவர் அருண் சித்தார்த் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று சனிக்கிழமை (06) பிற்பகல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2




## “அந்தப் பெண்மணியை நான் மன்னித்துவிட்டேன்”

யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்டு, முன்பள்ளி ஆசிரியையாக பணிபுரிந்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான செ.சத்தியலீலா என்பவர், கடந்த 2004ஆம் ஆண்டு, அமைச்சர் டக்லஸ் தேவானந்தா மீதான குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், அவசரகாலச் சட்டவிதியின் கீழ் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி தேர்தலில் கடும் போட்டி ஏற்படும்?

ஜனாதிபதி வேட்பாளர்களின் பதவிகள் தொடர்பில் பல அரசியல் கட்சிகளுக்கு இடையில் பாரிய போட்டிகள் ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு பல கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும்,

தொடர்ச்சி P2

## ஒக்.17க்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல்

ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு ( PAFFREL) வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## 7 இலட்சம் குடும்பங்கள் கடனில் சாப்பிடுகின்றன

நாட்டிலுள்ள 30 இலட்சத்து 29 ஆயிரத்து 300 கடன்பட்ட குடும்பங்களில் 6 இலட்சத்து 97 ஆயிரத்து 800 குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கடனாளிகளாக உள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான

## காணியை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

■ செந்தூரன் பிரதீபன்


சுமார் 28 வருடங்களின் பின்னர் பாதுகாப்பு படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க இலங்கை விமானப்படை முன்வந்துள்ளது.

அதற்கமைய குறித்த பிரதான மண்டபக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## மாத இறுதிக்குள் சம்பள உயர்வு

■ ஆ.ரமேஸ்



ஜனவரி மாதம் இறுதிக்குள் பெருந் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் உயர்வுக்கு தீர்வு கிட்டும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளை நிலையம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஐந்தாவது மாடியில் உத்தியோகபூர்வமாக ஞாயிற்றுக்கிழமை (07) திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## “ரணிலின் வருகையால் பயனேதும் இல்லை”

■ க. அகரன்

ஜனாதிபதியின் வவுனியா வருகையானது சம்பிரதாய பூர்வமான ஒரு நிகழ்வே தவிர, அதனால் பயன் ஏதும் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அண்மையில் வவுனியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.இதன்போது நிலஅபகரிப்பு அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம்.

தொடர்ச்சி P2

## ஒரு பாடசாலை நூறு கோவில்களுக்கு சமன்

### நிரூபித்து காட்டியவர் அமரர் மாணிக்கவாசகம் என்றார் மனோ

அரசாங்க பாடசாலைகளில் படிக்கும் பாமர பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஊதவிடுவதைப் போன்ற பெரும் புண்ணியம் ஏதுமில்லை. அதுவே இறைவனுக்கு ஆற்றும் பணி. அதுதான் “ஒரு பாடசாலை நூறு ஆலயங்களுக்குச் சமன்” என்ற கொள்கையாகும். இந்த கொள்கையை, தனது ஒரு ஏக்கர் விஸ்தீரண காணியை, வத்தளை வாழ் தமிழ் பிள்ளைகளின் பாடசாலை கனவுக்காக வழங்கி, தன் வாழ்வில் செய்து காட்டி நிரூபித்த மாமனிதர் அமரர் மாணிக்கவாசகம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## யுவதியின் சடலத்தை தோண்டி நிர்வாணமாக்கி வீசிய அவலம்

பண்டாரவளை பதுலுகஸ்தான பகுதியைச் சேர்ந்த ரஷ்மிகா மதுஷானி என்ற 24 வயதுடைய யுவதி கடந்த புதன்கிழமை (03) உயிரிழந்துள்ளார்.

அனைத்து மத சடங்குகளுக்கும் பிறகு சடலம் மறுநாள் (04) புதைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உயிரிழந்த யுவதிக்கு ஞாயிற்றுக்கிழமை (7) பிறந்த நாள் என்பதால் யுவதியின் தந்தை கல்லறைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, தனது மகளின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு, ஆடைகள் இன்றி நிர்வாணமாக எடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு, பண்டாரவளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டையடுத்து, பண்டாரவளை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தரை வழி

நாட்டின் அபிவிருத்திக்காகப் பல்கலைக்கழக சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னணி பங்களிப்பு குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்லும் வேலைத்திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களால் முக்கிய பங்கு வகிக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

விவசாயம், சுற்றுலா, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்காகப் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த முயற்சிகளில் தீவிரமாக இணைந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் வகையில் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்து மாணவர்களுக்குத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு மாணவர்களை ஒன்றிணையுமாறும் கேட்டுக்கொண்டார்.

மனித வளமே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக அமைகின்றது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நவீனத் தொழில்நுட்பத்தை மையப்படுத்தி அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் உள்ளிட்ட உயர்கல்வித் துறையை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து இதன்போது மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற துறைகளில் விரைவான முன்னேற்றத்தின் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

ஒரு நாடு என்ற ரீதியில் பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களை வலுவான துறைமுகங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார். தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்கான நில ரீதியிலான தொடர்பை ஏற்படுத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2025 ஆம் ஆண்டளவில் 5% பொருளாதார வளர்ச்சியை அடைவதன் இலக்கையும் 2030 ஆம் ஆண்டளவில் படிப்படியாக அதனை 7-8% ஆக அதிகரிப்பதன் இலக்கு குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, இலங்கை உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தை விரைவில் அடைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

## ஏப்ரலில் மகிழ்ச்சி

இந்த புத்தாண்டு காலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, லங்கா சதொச நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் பல உணவுப் பொருட்களின் விலைகளை மேலும் குறைக்க வர்த்தக அமைச்சும் திட்டமிட்டுள்ளது.

தற்போதுள்ள 450 லங்கா சதொச கிளைகள் இவ்வருடம் 500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மக்களுக்கு மானிய விலையில் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி தேர்தலில் கடும் போட்டி ஏற்படும்?

வேட்பாளர் பதவிகள் தொடர்பில் அந்தந்த கட்சிகளுக்குள்ளேயே குழு பிளவு ஏற்பட்டுள்ளமையே இந்த முரண்பாடான சூழலுக்கு வழிவகுத்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஏற்கெனவே விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவும், கட்சி ஆதரவளித்தால் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடத் தயார் என அண்மையில் தெரிவித்திருந்தார். அவரை.

தமிழ் மக்களின் கட்சிகள் இணக்கப்பாட்டிற்கு வந்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயார் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் தெரிவித்தார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல அரசியல் கட்சிகள் அவருக்கு வேட்பாளர் பதவியை வழங்கத் தயாராக இல்லை என அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்குப் பலரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைக்கப்பட்ட சில பெயர்களில் பிரபல கோடீஸ்வரரும் பிரபல கோடீஸ்வர வர்த்தகருமான தம்மிக்க பெரேராவின் பெயரும் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மிக்க பெரேரா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் உறுப்பினர் ஆவார்.

## "வடக்கில் சிவில் சமூகத்தில் நிலவும் சாதிப் பிரச்சினையை தீர்ப்பேன்"

வடக்கின் சிவில் சமூகத்தில் நிலவும் சாதிப் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், அந்தப் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்பட்டாலும் சாதிப் பிரச்சினையால் மக்கள் அவதிப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து கொழும்பில் வாழும் அரசியல்வாதிகள் இப்பிரச்சினை குறித்து குரல் எழுப்பாதது வேதனைக்குரியது எனவும் அருண் சித்தார்த் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் பல சாதிப் பாடசாலைகள் இருப்பதாகவும் அவற்றுக்கு அடிப்படை வசதிகள் கூட கிடையாது என்றும் சுட்டிக்காட்டிய அருண் சித்தார்த்,அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

அவ்வாறான 100 பாடசாலைகளின் பெயர்களை முன்வைக்குமாறும் அந்த 100 பாடசாலைகள் உடனடியாக அபிவிருத்தி செய்யப்படும் எனவும் யாழ். சிவில் சமூக நிலையத்திற்கு ஜனாதிபதி உறுதியளித்தார்.

சாதிப் பிரச்சினைகளுக்காக மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காத பிரதேச செயலகங்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் என்று கூறி சங்கங்களை அமைத்துள்ள காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் இருப்பதாக அருண் சித்தார்த், இச்சந்திப்பின்போது தெரிவித்தார்.

காணாமல் போனோர் சங்கங்களைச் சேர்ந்த எவருடனும் விவாதத்திற்குத் தான் தயாராக இருப்பதாகவும், அவர்கள் காணாமல் போனவர்கள் எனக் கூறி வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் சித்தார்த் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கும், கவனத்தில் கொள்ளப்படாத பல பிரச்சினைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் யாழ். சிவில் சமூக நிலையத்தினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

## "அந்தப் பெண்மணியை நான் மன்னித்துவிட்டேன்"

அதற்கமைய வழக்கு விசாரணையின்போது கொழும்பு மேல் நீதிமன்றம் இவருக்கு '15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, இரண்டாண்டுகால சிறைத்தண்டனையுடன் 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும்' என்கின்ற நிபந்தனையுடன் 2018ஆம் ஆண்டு விடுதலை செய்துள்ளது.

எனினும் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருப்தியுற்றிராத சட்டமா அதிபர் திணைக்களம் அத்தீர்மானத்தை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தது.

அந்த வகையில், மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேல் நீதிமன்ற தீர்ப்பை நிராகரித்து, அரசியல் கைதியான சத்தியலீலாவுக்கு 2023 இல் மரண தண்டனைத் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில் அவர், மேல்முறையீட்டு நீதிமன்றம் தனக்கு அளித்த தண்டனைத் தீர்ப்பை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி வழக்கிலிருந்து விடுவிக்குமாறு உயர் நீதிமன்றில் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை, சத்தியலீலா, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் குரலுயர்த்தி வருகின்ற, 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு ஒரு கருணை மனுவினை அனுப்பி வைத்துள்ளார். அதில் அவர், "என்னைப் பொறுத்தமட்டில் கசு வருடங்களாகப் பட்ட துன்ப துயரங்களுக்குப் பின்னரும் ஒரு மரணதண்டனைக் கைதியாக மீண்டும் சிறைக்குச் செல்வதை இந்த ஜென்மத்தில் நினைத்துப் பார்க்கவே முடியாது. அதைவிட உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்.

எனவே, ஜனாதிபதி அவர்கள், பிள்ளைகளையும், பெற்றோரையும் பிரிந்து14 ஆண்டு காலம் சிறையில் வாடி விடுதலையான பின்பும் மரணதண்டனைத் தீர்ப்பிற்கு ஆளாகியுள்ள எனக்கு கருணை அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கி எனது இயல்பு வாழ்விற்கு வழிவகுக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் சனிக்கிழமை (06) இடம்பெற்ற சந்திப்பின்போது, குரலற்றவர்களின் குரல் அமைப்பினால், குறித்த பெண்மணியின் கருணை மனு தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்போது, ஜனாதிபதிக்கு அருகிலிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "அந்தப் பெண்மணியை எப்போதோ நான் மன்னித்துவிட்டேன். ஆகையால், இந்த விடயம் சம்மந்தமாக நான், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அவரது துரிதமான விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பேன்" என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

## ஒக்.17க்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல்

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கை பிரகடனங்களுக்கு பொதுவான கட்டமைப்பை தயாரிப்பது குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பானர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் தேர்தலில் முதன்முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களை இலக்கு வைத்து தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து தற்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

## காணியை விரைவில் விடுவிக்க...

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை விமானப்படையின் வான்வெளிப் பொறியியல் துறையின் பணிப்பாளர் நாயகம் ஏயார் வைஸ் மார்சல் முதித்த மஹவத்தகே, திட்ட இணைப்பாளர் குரூப் கப்டன் துஷார பண்டார, இலங்கை விமானப் படையின் பலாலி படைத்தளத்தின் கட்டளை அதிகாரி குரூப் கப்டன் சமிந்த ஹேரத் , இலங்கை விமானப் படையின் அதிகாரிகள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கல்வித் துறைசார் அதிகாரிகள் , மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சுமார் எட்டு மில்லியன் ரூபாய் செலவில் இலங்கை விமானப் படையினரால் பாடசாலைக்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் அங்குரார்ப்பண நிகழ்வாக இன்றைய அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைந்துள்ளது. அத்துடன் பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், நூலகத்திற்கான புத்தகங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

205 வருடகால வரலாற்றைக் கொண்ட யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான 2.5 பர்சஸ் காணி இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும், விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவில்லை எனவும் பாடசாலையின் அதிபர் இதன்போது கூறினார். ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமையக் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மிக விரைவில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். ஏனைய உட்கட்டமைப்பு பிரச்சினைகள் தொடர்பில் எழுத்துமூலம் கோரிக்கைகளை சமர்பிக்குமாறும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

## 7 இலட்சம் குடும்பங்கள் கடனில் சாப்பிடுகின்றன

மொத்தக் கடனாளி குடும்பங்களில் உணவுக்காகக் கடன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 22.3 சதவீதமாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

6,97,800 குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக் கடனாளிகளாக உள்ளதாகவும் அதில் 1 இலட்சத்து 58ஆயிரத்து 200 பேர் உள்ளடங்குவதாகவும் பேராசிரியர் கூறினார்.

இதேவேளை, கடனை மீளச் செலுத்துவதற்காக ஏறக்குறைய 370,000 குடும்பங்கள் கடன் பெற்றுள்ளதாகவும், 4,91,000 குடும்பங்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்காகக் கடன் பெற்றுள்ளதாகவும் வசந்த அது கோரல தெரிவித்தார்.

53,200 குடும்பங்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும் கடன் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொருளாதார நெருக்கடியின் பின்னர் (2022ஆம் ஆண்டிற்குப் பின்னர்) 6,88,000 குடும்பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளதாகத் தெரிவித்த வசந்த அத்துகோரல, பெரும்பாலானோர் அடமானச் செயற்பாடுகள் மூலம் கடன் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

அடமான முறையில் கடன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 9,70,000 என்று அவர் கூறினார்.

இது தவிர வங்கிகளில் 97,000 குடும்பங்களும், நிதி நிறுவனங்களில் 2,72,250 குடும்பங்களும், பண தரகர்களிடம் 3,03,500 குடும்பங்களும் கடன் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

## "ரணிலின் வருகையால் பயனேதும் இல்லை"

நாம் கூறும் விடயங்கள் உடனடியாக தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் சென்றிருந்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. நாங்கள் கேட்ட விடயங்களிற்கான சரியான பதிலை அவர் தரவில்லை. சம்பிரதாயபூர்வமான ஒரு கூட்டமாகவே இது இடம்பெற்றது.

இதேவேளை ஜனாதிபதி வந்துசென்ற பின்னர் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரியவில்லை. எமது மக்களை அச்சுறுத்துவதற்கான செயற்பாடே அது. ஏற்கெனவே பொலிஸ் சோதனை சாவடி அங்கு இருக்கின்றது.இந்நிலையில், இராணுவத்தின் தேவை என்ன என்று புரியவில்லை. இது தொடர்பாக நாம் பாராளுமன்றில்பேசுவோம்.

அத்துடன் அரசால் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத தடைச்சட்டம் மோசமானதாகவே உள்ளது. அதன்மூலம் ஜனநாயக போராட்டங்கள் தடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. பத்திரிகை சுதந்திரம் கட்டுப்படுத்தப்படும் சந்தர்ப்பமும் உள்ளது.

இதற்கு நாம் பாராளுமன்றத்தில் எதிர்ப்பைக்காட்டுவோம். இந்தச்சட்டம் ஒழிக்கப்படவேண்டும் என்பதே ஐநா சபையின் நிலைப்பாடாக உள்ளது என்றார்.

## மாத இறுதிக்குள் சம்பள உயர்வு

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு அங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டுக்குப் பொருளாதார வளர்ச்சிக்குப்பெறும் பங்காற்றிவரும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தனக்குக் கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்களை என்னால் முடிந்தவரை நிறைவேற்றியுள்ளேன்.

அந்தவகையில் இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தனது உரையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் விரைவில் தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருமாறு வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

இவரின் வேண்டுகோள் இம்மாத இறுதிக்குள் நிறைவேறும் என நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயம் தொடர்பில் கலந்துரையாட ஜனாதிபதி திகதி குறித்துள்ளார்.தன்னை அழைத்துப் பேசியும் உள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பாகச் சகல தரப்புகளும் கலந்துரையாடவுள்ளதுடன், பெருந்தோட்ட கம்பனிகளுடன் பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆகையால், இம்மாத இறுதிக்குள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்குத் தீர்வு கிடைக்கும் இதை இந்த நாட்டு மக்களைக் காத்து வரும் ஜனாதிபதியே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குத் தெரியப்படுத்துவார் என அமைச்சர் தெரிவித்தார்.

## ஒரு பாடசாலை நூறு கோவில்களுக்கு சமன்

வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்து வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்லூரி ஸ்தாபகர் அமரர் மாணிக்கவாசகம் சிலை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

அரசியல்வாதிகள் வத்தளை வாழ் தமிழ் மக்களை ஏமாற்றி வந்தார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் "தமிழ் பாடசாலை கட்டி தருவேன்", என்று சொல்லி வாக்குகளை வாங்கி ஏமாறுவது தொடர்ந்து நிகழ்ந்து வந்தன.

இதற்கிடையில் இங்கே வத்தளையில் இன்னொரு காணியில் சில எடுபிடி தமிழர்கள் இதே மோசடி அரசியல்வாதிகளை அழைத்துச் சென்று பலமுறை அடிக்கற்கள் நாட்டி ஏமாற்றியதும் நடந்து வந்தது. இவ்வேளையில்தான் இறைவனின் பிரதிநிதியாக, 2019 வருடத்தில் சுதனது சொந்த காணியை அரசுக்கு வழங்கி வத்தளையில் அரசாங்க தமிழ் பாடசாலை அமைக்க மாமனிதர் அமரர் மாணிக்கவாசகம் என்னை தொடர்புகொண்டார் என்றார்.



# சிகரெட்டுகளுடன் 7 பேர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு-ஏறாவூர் பிரதான வீதியில் சனிக்கிழமை (06) மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது, தடை செய்யப்பட்ட சிகரெட்டுகளுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளவிய ரீதியில் இடம்பெற்றுவரும் “யுக்திய” நடவடிக்கையின் பிரகாரம் பொலிஸாரால் மட்டு. ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள மைலம்பாவெளி பகுதியால் பயணித்த அனைத்து வாகனங்களையும் நிறுத்தி சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

இதில் பஸ் ஒன்றை சோதனையிட்டபோது, 2,186 தடை செய்யப்பட்ட சிகரெட்டுகள் மீட்டுள்ளதுடன், அதனை கடத்திச் சென்ற 7 பேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த

# ஊழியர்களுக்கு அதிர்ச்சி

பணிக்கு வராமல், சட்டவிரோதமாக போராட்டங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஊழியர்களின் சேவையை இடைநிறுத்த, தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சார சபையின் தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

ஊழியர்கள் குறித்த தகவல்களை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையை 6 பிரிவுகளாகப் பிரிப்பது தொடர்பிலான உத்தேச சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கடந்த 3 நாட்களாக சில ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக, மின்சார சபையின் பொதுச் சேவைகள் அலுவலகங்களின் ஜன்னல்கள் மூடப்பட்டு இருந்தமை தொடர்பில் அமைச்சுகளுக்குப் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.







## அகிலத் திருநாயகியை சந்தித்தார் ஜனாதிபதி

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 22ஆவது ‘மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப்’ போட்டியில் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வென்ற அகிலத் திருநாயகியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நேரில் அழைத்து பாராட்டி கௌரவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் சனிக்கிழமை (06) நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, வயது என்பது வெறும் இலக்கம் மட்டுமே என்பதை நிரூபித்து அகிலத்தை வென்ற அகிலத் திருநாயகிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி, வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

# தீ விபத்தில் மீன்வாடி தீக்கிரை



■ ரஸீன் ரஸ்மின்

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரிபாடு கிராமத்தில் உள்ள மீன்வாடியில் சனிக்கிழமை (6) இரவு 8.00 மணியளவில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் மீன்வாடி முழுமைாக தீக்கிரையாகியுள்ளது.

சம்பவத்தின்போது, மீனவர்கள் தொழில் முடிந்து வீட்டுக்குச் சென்ற பின்னர் அந்த வாடியில் காவலாளி மட்டுமே இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீன்வாடி திடீரென தீப்பற்றி எரிவதைக் கண்ட அயலவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும், தீயினால் குறித்த மீன்வாடி முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், குறித்த வாடியில் இருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் தீக்கிரையாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பேராதனை பல்கலை பழைய மாணவர் சங்க

# கொழும்புப் பிரிவு ஒன்றுகூடல்



பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க, கொழும்பு பிரிவின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு மத்தேகொட சப்பர்ஸ் லீஷர் பேயில் 2024 ஜனவரி 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு, (கொட்டாவ பிலியந்தலை 342 பஸ் பாதையில் இருந்து சிறிமல் உயன ஒழுங்கையில், மத்தேகொட இராணுவ முகாம் நுழைவாயிலுக்கு அடுத்ததாக) அன்றைய நிகழ்ச்சி காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இதன்போது, நேரடி இசை நிகழ்ச்சிகள் மற்றும் மதிய உணவுடன் பல பொழுதுபோக்கு நிகழ்வுகளும் இடமபெறும்.

பொதுச் செயலாளர் பாலித சியம்பலாபிட்டியவை 077-7741616 என்ற இலக்கத்தில் அழைத்து முன்பதிவு செய்து கொள்ளவும்.

முகாமைத்துவ கவுன்ஸில் உறுப்பினர்களிடமும் நிகழ்வு இடம்பெறும் நாளில் நுழைவாயிலிலும் டிக்கெட்டுகள் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாத்திரைக்கு சென்ற பெண் மரணம்



■ செ. தி.பெருமாள்

சிவனொளிபாத மலைக்கு யாத்ரீகர் குழுவுடன் சென்ற பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (06) உயிரிழந்துள்ளார்.

பனாகொட-பன்னிமுல்ல, பரணவல பகுதியைச் சேர்ந்த பி.எல்.மலானி என்ற 58 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நல்லதண்ணி நகரின் வாகன தரிப்பிடத்திற்கு கீழே உள்ள சீதா ககுல ஓயாவின் படியிலிருந்து தவறி விழுந்துள்ளதாகவும் தலையில் பலத்த காயமடைந்த நிலையில், மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் நல்லதண்ணி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் மரணம் தொடர்பான பிரேதப் பரிசோதனை டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் நடைபெற உள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சுற்றிவளைப்பின்போது

# சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

■ ரி.எல்.ஜவ்பர்கான்


“யுக்திய” போதையொழிப்பு திட்டத்தின் கீழ் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

பதில் பொலிஸ் மா தேசபந்து தென்னகோனின் பணிப்புரையின் கீழ் மட்டக்களப்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாவி அருகில் பாரியளவிலான கசிப்பு உற்பத்தியை சுற்றிவளைத்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மழைநீர் காரணமாக அந்த இடத்திற்குச் செல்வதில் சிரமம் ஏற்பட்டமையால் சந்தேக நப்ரகள் தப்பிச் சென்றுள்ளதுடன், கோடா பீப்பாக்கள் 9 கெலன் 1 மற்றும் வடிக்கும் உபகரணங்கள் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








# இரு தமிழ் இளைஞர்கள் நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட பிரதான அமைப்பாளரும் ஐக்கிய இளைஞர் சக்தியின் உப தலைவருமாகிய லக்ஷயன் முத்துக்குமாரசாமியும், வவுனியா மாவட்ட அமைப்பாளர் நிரோஸ்குமார் சாந்திகுமார் ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவில் (working commitee) வட மாகாணத்தை பிரதிநித்தபடுத்தும் விதமாக உறுப்பினர்களாக எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவினால் ஞாயிற்றுக்கிழமை (07) நியமிக்கப்பட்டுள்ளனர்.



லக்ஷயன் மற்றும் நிரோஸ்குமார் ஆகியோர் எதிர்கட்சி தலைவரின் முறையே முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஒருங்கிணைப்பு செயலாளர்களாக கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

# கணவரின் தாக்குதலால் மனைவி உயிரிழப்பு

■ நடராஜா கிருஸ்ணகுமார்

கணவரால் கத்தியினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பூநகரி வலைப்பாட்டி பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) பதிவாகியுள்ளது.

வலைப்பாட்டினை சேர்ந்த 02 பிள்ளைகளின் தாயாரான 33 வயதுடைய நீக்கிலாஸ் கொலஸ்ரி மேரி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 31ஆம் திகதி அதிகாலை 5.00 மணிக்கு மதுபோதையில் இருந்த கணவரால் மனைவியை கத்தியினால் தாக்கிய நிலையில், படுகாயமடைந்துள்ளார். அவரை மீட்ட அயலவர்கள், பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பல்லவராயன்கட்டுச் சந்தி வரை கொண்டு சென்று, அவசர அம்பியூலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (06) உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# கணவனை கொன்ற மனைவி கைது



■ பாலித ஆரியவன்ச

மஹியங்கனை - சோரபோர பிரதேசத்தில் கணவனை கத்தியால் குத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் அவரது மனைவி சனிக்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளார்.

சொரபொர - கபுருமுல்லயை சேர்ந்த சுதேஷ் குமார ஜயவர்தன என்ற 42 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சம்பவதினத்தன்று இரவு 11.30 மணியளவில் குடிபோதையில் வீட்டிற்கு வந்து தன்னையும் இரண்டு குழந்தைகளையும் கொலை செய்வதாக கூறி, மிரட்டல் விடுத்து தாக்க முற்பட்டதால் தான் அவரது கத்தியை பரித்து அவரை கத்தியால் தாக்கியதாக உயிரிழந்தவரின் மனைவி அன்றிரவே பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டின்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், காயமடைந்த நபரை சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதித்தபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்த நபரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மஹியங்கனம வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# கிளிநொச்சியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

■ நடராஜா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் சனிக்கிழமை (06) சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மணல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவல் ஒன்றுக்கமைய இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்டவர்களும் வாகனங்களும் பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மணல் அகழ்வுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டுவருவதாக தெரிய வந்துள்ளது.



# நாங்கள் வாழ வேண்டுமாயின் சுவாசிக்க வேண்டும்

2023ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 75 மில்லியன் அதிகரித்துள்ளதாக அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறை அறிவித்துள்ளது. அதன்படி, 2024 ஜனவரி முதல் திகதிக்குள் உலக மக்கள் தொகை எண்ணூறு மில்லியன் அல்லது 8 பில்லியனாகியது.

இதற்கிடையில், நம் நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சியை 23 மில்லியன் வரை இருக்கும். உலக மக்கள் தொகை தகவல்களைக் கண்காணித்து, அது தொடர்பான தகவல்களைப் பற்றி விழிப்புடன் இருப்பது முக்கியம். ஏனெனில் அந்த விடயங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நமது சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன.

தற்போதைய வளர்ச்சி விகிதத்தில் உலக மக்கள் தொகை அதிகரிப்பு காரணமாக, 2050இல் உலக மக்கள் தொகை 9.6 பில்லியனாகவும், 2100இல் 12.3 பில்லியனாகவும் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய உலக பொருளாதார, அரசியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஒப்பிடுவதன் மூலம் எதிர்கால உலகத்தைப் பார்க்கிறோம். ஆனால், இந்த காரணிகளில், தொழில்நுட்ப காரணி கணிப்புகளுக்கு அப்பால் வளர்ந்து வருகிறது.

இதனால் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கைத் தரம் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டும். மதிப்பீடுகளின்படி, 2050இல் உலக மக்கள்தொகை 9.6 பில்லியனாக அதிகரித்தால், உலகிற்குச் சரியாக உணவளிக்க, தற்போதைய சாகுபடி நிலத்தின் அளவு 36 சதவீதம் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆனால் தற்போது, உலகின் உணவு உற்பத்தி செயல்முறை நான்காவது பசுமைப் புரட்சிக் கட்டத்தை நெருங்குகிறது. பயிர் சாகுபடிக்கான தொழில்நுட்பம் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மிகவும் மேம்பட்டது. மீத்தேன் வாயு வெளியேறுவதைத் தவிர்க்க விஷ ஜந்துக்களின் உற்பத்தியைக் குறைக்க உலக நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை, உலகம் திருப்திகரமான நிலையில் இல்லை. தற்போது வாழும் 8 பில்லியன் மக்களில் சுமார் ஒரு பில்லியன் மக்கள் அல்லது 17 சதவீதம் பேர் தற்போது பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பூமியின் 70 சதவீதம் தண்ணீரால் மூடப்பட்டிருந்தாலும், அதில் ஒரு சதவீதம் மட்டுமே மனித நுகர்வுக்கு ஏற்றது. எனவே, உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் தற்போது போதிய தண்ணீர் இன்றி தவித்து வருகின்றனர். அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் தினமும் ஆயிரம் குழந்தைகள் இறக்கின்றன.

அதிகரித்து வரும் உலக மக்கள் தொகைக்கு சுகாதார வசதிகளை வழங்குதல், வேலையின்மை அதிகரிப்பு மற்றும் மக்களுக்கு வேலை வழங்குதல், வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களின் பயன்பாடு ஆகியவற்றை அதிகரிப்பது இன்னும் கேள்விக்குறியாக உள்ளது.

பூமியின் மேற்பரப்பில் எழுபது சதவிகிதம் கடல் ஏரிகள் மற்றும் தடாகங்களால் மூடப்பட்டிருக்கும் அதேவேளையில், மற்றொரு 21 சதவிகிதம் மனிதர்கள் வசிக்கத் தகுதியற்ற துருவப் பகுதிகளால் மூடப்பட்டுள்ளது. எனவே, ஒருபுறம், மக்கள் தொகை அதிகரித்து, மக்கள் வாழ ஏற்ற நிலம் குறைவாக உள்ளது. தற்போதைய நகரமயமாக்கல் உலக சமூகத்தின் முன் தீர்வு இல்லாத மற்றொரு பிரச்சினையாகும்.

கடல் மாசுபாடு அதிகரிப்பது நகரமயமாக்கலின் நேரடி விளைவாகும். எனவே, கடல் மாசுபாட்டைக் குறைக்கவும், காடுகளை அழிப்பதைத் தடுக்கவும் உலக சமூகத்தின் முயற்சிகளுக்கு நாம் தோள் கொடுக்க வேண்டும், ஏனெனில் நாம் வாழ சுவாசிக்க வேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள், ஆசைகள் அற்றவர்கள், பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள். ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது. தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது, இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.
வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா?
அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

# உண்மை மற்றும் நல்லிணக்கம்?

**லக்ஸ்மன்**

1958 முதல் தமிழர் விரோத கலவரங்களில் தொடங்கி, மீண்டும் மீண்டும் வன்முறைகள் அவ்வப்போது, இடம்பெற்று வந்துள்ளன. ஆனால், அவற்றுக்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அவற்றின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா?

நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், நிலைமாறு கால நீதி, போர்க்குற்றம், சர்வதேச நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற விடயங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பல தடவைகளில் பேசப்பட்டாயிருந்தாலும் இன்னமும் இந்த விடயம் தொடர்பில் சந்தேகங்களும், தெளிவின்மைகளுமே காணப்படுகின்றன. இந்த நிலையில்தான் அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலைமாறு கால நீதி மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது இந்த ஆணைக்குழுவின் நோக்கமாக இருக்கிறது.

ஏற்கெனவே பல ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், இந்த சுயாதீன ஆணைக்குழுவைப் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாளைய (09.01.2024) பாராளுமன்ற அமர்வுகளில் இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. தற்போது உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகம் இயங்கிவருகிறது. இச் செயலகம் ஆணைக்குழுவை நிறுவுவதற்கான ஆரம்பக் கட்ட வேலைகளில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கைப் பிரஜைகளின் முறைப்பாடுகள் தொடர்பில் உண்மையை உறுதி செய்யும் வகையில் நல்லிணக்கம், இழப்பீடுகள் மற்றும் நிலையான அமைதிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக ஆணைக்குழு இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் பல தசாப்தங்களாக மக்கள் எதிர்கொண்ட மோதல் சூழ்நிலைகளில் அவர்களை ஆதரிப்பதற்கோ, அவர்களின் இன்னல்களைக் குறைப்பதற்கோ முயற்சிக்காத நிலையில், தற்போது அவற்றிலிருந்து மீள்வதற்கு உண்மையைத் தேடுவதற்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கும் வகையில் ஆணைக்குழு நிறுவப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவம், சகிப்புத்தன்மை, பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் என்பன முக்கியமானதாக இருக்கின்றன. இருந்தாலும் அவற்றின் கடைப்பிடித்தல், நடைமுறைப்படுத்தல் மிகக்குறைவே.

ஆனாலும், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான ஆணைக்குழுவை நிறுவுவதற்கான இப்போதைய தேவைப்பாடு என்ன என்ற கேள்வியினை கேட்போமானால், முதலில் மேலும் ஒரு காலம் கடத்தலுக்கான முயற்சி என்றே முதலில் பதில் கிடைக்கும். ஆனால், அதற்குச் சொல்லப்படும் காரணம், ஏற்கெனவே அமைக்கப்பட்டவைகள் வெறுமனே அமைக்கப்பட்டவை, ஆனால் இது பாராளுமன்றத்தின் மூலம் சட்டமாகக் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது என்பதாகும். அப்படியானால் பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் இணைந்திருக்கின்ற 13ஆவது திருத்தம் இதுவரை முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்பது அதில் கேள்வியாக உருவாகும்.

> ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 2012இல் இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்பிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது

புதிதாக அமைக்கப்படவிருக்கின்ற ஆணைக்குழு மூலம், 1983 - 2009 வரை இலங்கையில் நடைபெற்ற போர் தொடர்பாக உண்மையைக் கண்டறியும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் போதும் அதன் விளைவாகவும் ஏற்பட்ட உயிர், பொருட்சேதங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள், குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும்.

1983 ஜூலை கலவரத்தை எடுத்துக் கொண்டால் அக்கலவரத்தில் தமிழர்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அதனால் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்பு பெரும் இழப்பாகவே சொல்லப்படுகிறது. 40 வருடங்கள் கடந்து விட்ட அக்கலவரமே பெரும்பாலான தமிழ் புத்திஜீவிகளும் தொழில் வல்லுநர்களும் நாட்டைவிட்டு வெளியேறும் நிலையை ஏற்படுத்தியிருந்தது. அப்போது புலம்பெயர்ந்தவர்கள் ஐரோப்பா, கனடா, அமெரிக்கா எனப் பல இடங்களிலும் சிதறியுள்ளனர். அதே நேரத்தில் இந்தியாவிலும் குறிப்பிட்டளவானவர்கள் வாழ்கின்றனர்.

அது போரின் மோசமான தொடக்கமாக இருந்தாலும், 2009ஆம் ஆண்டு மே 18 உடன் மௌனத்துக்கு வந்தது. ஆனால் அந்த இறுதிப் போர் தொடர்பான பொறுப்புக்கூறல் இதுவரை நடைபெறவில்லை. அது நடைபெறவேண்டும் எனத் தமிழர் தரப்பினாலும் மேலைத்தேய அமைப்புகளாலும் பெரும் பிரயத்தனம் எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் இன்னமும் அது கைகூடவில்லை. அது கைகூடுவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கு யார்தான் முன்வருவார். இருந்தாலும் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் எந்தப் பாதகமான நிலைமையையும் ஏற்படுத்தவில்லை. இருந்தாலும், எதிர்வரும் செப்டெம்பர் அமர்வினை இலக்காகக் கொண்டே இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்படுகிறது என்பது மாத்திரம் உண்மை.

2008இல் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ உடலகம ஆணைக்குழுவின் மந்த கதியான செயற்பாடுகள் காரணமாகச் சர்வதேச அவதானிகள் வெளியேறியதனால் செயலற்றுப் போனது. அதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது.

எல்.எல்.ஆர்.சி எனப்பட்ட இந்த ஆணைக்குழு மாவட்டங்கள் தோறும் பல அமர்வுகளை நடத்திச் சேகரித்த தகவல்களைக் கொண்டு தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஒன்றினை முன்வைத்தது. அத்துடன், காணாமலாக்கப்பட்டோர், மரணங்கள் இழப்புகளுக்கு நிர்ணயித்த பெறுமதி மிகவும் விமர்சனத்துக்குள்ளானது. அதே நேரத்தில், தமிழர்கள் கோரி நிற்கின்ற சர்வதேசப் பொறிமுறை என்ற நிலைப்பாட்டைத் தட்டிக்கழிப்பதாக அமைந்திருந்தது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை 2012இல், இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்பிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அதன் தொடர்ச்சியாக 2015 இல் 30-1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டவேளை, அதற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. பல்வேறு திருத்தங்களின் பின்னரே அந்த அனுசரணை வழங்கப்பட்டது. ஆனால் அத் தீர்மானத்தினை கோட்டாபய ஜனாதிபதியான பின்னர் அவ் அனுசரணையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

அந்த அனுசரணை முடிவு, பல்வேறு சர்வதேச அழுத்தங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது என்பது அனைவருக்குமே தெரிந்திருந்தது. ஆனால், அந்த அனுசரணையுடன் கூடியதான தீர்மானத்தின் பலன் கிடைக்கவில்லை என்பதுடன் பாதிக்கப்பட்டோரின் எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் ஒவ்வொரு வருடங்களிலும் ஒவ்வொரு சாக்குப்போக்குகள் சொல்லப்பட்ட கங்கடத்தப்பட்டு 2022 ஒக்டோபரில் நிறைவேற்றப்பட்ட பேரவையின் தீர்மானத்தின் படி கடும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் நடைபெறவேண்டும். மனித உரிமைகள் தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்தலுக்கான முயற்சிகள் நீண்டகாலமாகச் செய்யப்படவில்லை என்பதே இதற்கு அர்த்தமாகும்.

நாட்டில் நடைபெற்ற போரின் போதும் அதற்குப் பின்னரான வருடங்களிலும் நடைபெற்ற அழிவுகளுக்கும் அட்டூழியங்களுக்கும் பொறுப்பான குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற அல்லது அவர்களது பதிலைப் பெறுகின்ற முயற்சியொன்றே தேவையாக இருந்தது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் நடைபெற்ற யுத்தம் அதனால் ஏற்பட்ட விளைவுகள், அழிவுகள், இழப்புக்கள் கணக்கிலடங்காதவைகளே. 2009 இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற அழிவுகளின் வரலாறு பதிவுகளுக்கும் கணக்குகளுக்கும் அப்பாற்பட்டதாகவே சொல்லப்படுகிறது. இவ்வாறிருக்கையில் இலங்கையின் பல்லின சமூகங்களிடையே இருக்கின்ற இணக்கப்பாடு, பொருத்தப்பாடின்மையைக் களைதல் முக்கியமானதாகும்.

கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஏனைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இன முரண்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்றே சொல்ல முடியும்.

இவ்வாறான நிலையில் நல்லிணக்க முயற்சிகளுக்கான பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்படுவதும் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த இந்த ஆணைக்குழு முயற்சி செய்யுமா. உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறாக இருக்கும் என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

எது எவ்வாறானாலும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் மனங்களில் வரலாறாகப் பதிவாகியுள்ள ஏமாற்றங்கள் நம்பிக்கையீனங்களைக் களைந்து அரசியல் தலையீடு, ஆதிக்கத் தலையீடுகளை முகம் கொடுத்து பக்கச்சார்பின்றி நீதி, நியாயத்துடன் செயற்படுமா என்பதற்காக காத்திருப்போம்.

## கடிதங்கள்

### வன விலங்குகளால் அசௌகரியம்

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் மற்றும் ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் இரவு வேலைகளில் காட்டு யானையின் தொல்லை, பகல் வேளைகளில் குரங்குளின் தொல்லை காரணமாக தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வாழும் 70 சதவீதமானோர் விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், தற்போது நெற் செய்கையை விட மேட்டு நிலச் செய்கைகளும் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, வன்னேர்க்குளம், ஆணை விழுந்தான், ஜெயாபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது காட்டு யானைகள் மற்றும் குரங்குகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

குறித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர் செய்கைகளை யானைகள் மற்றும் குரங்குகளால் அழிவிற்குட்பட்டு வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் பாரிய அளவில் அழிவுகள் ஏற்படுவதால் நட்டத்தை எதிர்கொண்டு வருவதாக கூறிய விவசாயிகள், குறித்த விடயத்திற்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்



கொமர்ஷல் வங்கியின்

# புதிய வியாபார இலச்சினை அறிமுகம்





கொமர்ஷல் வங்கி நிலைபேறாண்மைக்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், 2024ஆம் ஆண்டைத் தொடங்கியுள்ளது. நீல நிறத்தில் அங்கீகரிக்கப்படும் கொமர்ஷல் வங்கியின் இலச்சினை, இனி பச்சை நிற அம்சத்தையும் உள்ளடங்கியிருக்கும்.

இது நிலைபேறாண்மை, பன்முகத்தன்மை, உள்ளடக்கம், நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, சமூக சமத்துவம், பொறுப்புக்கூரல் மற்றும் சூழல் நட்பு வங்கித் தீர்வுகள் ஆகியவற்றுக்கான வங்கியின் பன்முக அர்ப்பணிப்பை பிரதிநிதித்துவப்படுத்தும்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கருத்துத் தெரிவிக்கையில், 'நிலைபேறாண்மை தன்மைக்கான எங்களின் அர்ப்பணிப்பு என்பது வெறும் வார்த்தையல்ல, அது எங்கள் டிஎன்ஏவில் பதிந்து, எங்களது முடிவுகள், செயல்கள் மற்றும் நாங்கள் வழங்கும் சேவைகளை பாதிக்கிறது' 'நாங்கள் செய்யும் அனைத்திலும் ஒரு நிலைபேறாண்மை வங்கியாக இருக்கிறோம், மேலும் அதன் நிறுவன அடையாளத்தில் அந்த அர்ப்பணிப்பைப் பிரகடனப்படுத்தும் இலங்கையின் முதல் அமைப்பாக நாங்கள் இருக்கிறோம், மேலும் எங்கள் பங்குதாரர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், மற்றும் வணிகப் பங்காளிகள் முதல் பார்வையில் அதைக் காண முடியும்'

'புதிய இலச்சினை எங்கள் செயல்பாடுகளின் அனைத்துத் துறைகளிலும் முழுமையான நிலைபேறாண்மை தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் நாங்கள் வணிகம் செய்யும் விதத்தில் எங்கள் நடைமுறை அர்ப்பணிப்பு காகிதமில்லாத பரிவர்த்தனைகள், பொறுப்பான இணக்க நடைமுறைகள் மற்றும் ஆற்றல்-திறனுள்ள செயல்பாடுகள் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது' என மனதுங்க மேலும் கூறினார்.

வங்கி அதன் நிலைபேறாண்மை தன்மை நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் கோட்பாடாக மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட நிலைத்தன்மை உத்தி மற்றும் வரைபடத்தைப் பின்பற்றுகிறது. இந்த மூலோபாயம் மூன்று முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது - நிலையான வங்கி, பொறுப்பான அமைப்பு மற்றும் சமூக தாக்கம். இந்தத் தூண்களின் கீழ் ஒன்பது முக்கிய பகுதிகள் உள்ளன - பொறுப்பான நிதி, நிதி உள்ளடக்கம், நிலையான தயாரிப்புகள் மற்றும் சேவைகள், பசுமை மற்றும் பாதுகாப்பான பணியிடம், பணியிட கலாச்சாரம், சமூக நிறுவனம், சமூக ஈடுபாடு மற்றும் சுற்றுச்சூழல் ஈடுபாடு ஆகியன அடங்கியுள்ளன.

தரமான கல்வி, பாலின சமத்துவம், கட்டுப்படியாகக்கூடிய மற்றும் தூய்மையான ஆற்றல், ஒழுக்கமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி, தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு, பொறுப்பான நுகர்வு மற்றும் ஐக்கிய நாடுகளால் நிர்ணயிக்கப்பட்ட ஏழு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ் இந்த முக்கிய பகுதிகள் அனைத்தும் இணைந்திருப்பதாக வங்கி தெரிவித்துள்ளது.

அதன் நிலைபேறாண்மை தன்மை இலக்குகளுக்கு இணங்க, கொமர்ஷல் வங்கி ஒரு உயர்நிலையான நிலைத்தன்மை குழுவை நிறுவியுள்ளது, இது நிலைபேறாண்மை தன்மை மூலோபாயத்தை உருவாக்குதல் மற்றும் உயர்மட்ட முடிவெடுப்பதற்கு பொறுப்பாகும். அனைத்து முக்கிய வணிக செங்குத்துகளின் பிரதிநிதித்துவத்துடன் வங்கியின் நிலைத்தன்மை செயற்குழு ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்திகளை செயல்படுத்துவதில் பணிபுரிகிறது. ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக, வங்கியானது சிறந்த கிளை மற்றும் துறைக்கான விருது வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கூடுதலாக, நிறுவனத்திற்குள் ஒரு நிலையான கலாச்சாரத்தை உருவாக்குவதில் ஊழியர்களை ஈடுபடுத்துவதற்காக பல்வேறு வணிக பிரிவுகளின் தன்னார்வலர்களை உள்ளடக்கிய ஒரு நிலைத்தன்மை குழு உருவாக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நட்பு உற்பத்திக்கு ஆதரவளிக்கும் நிலையான நிதியுதவி தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக வங்கி IFC, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), குளோபல் கிரீன் க்ரோத் இன்ஸ்டிட்யூட் (GGGI) மற்றும் இலங்கை பசுமை கட்டிட கவுன்சில் (GBCSL) ஆகியவற்றுடன் பசுமை செயல்பாடுகள் மற்றும் நிலையான கட்டுமானம் என்பவற்றுக்காக ஒத்துழைத்துள்ளது.

SHMA இரண்டாவது SSG நிகழ்ச்சி

# பயிலல் நிலையம் கண்டியில் திறப்பு



சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் இலங்கை இளைஞர்களின் திறமைகளை கட்டியெழுப்பும் நோக்குடன், ஏ.பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட்டின் Swiss Hotel Management Academy Pvt. Ltd. (SHMA), தனது இரண்டாவது நிலைபேறான வளர்ச்சிக்கான திறன் நிகழ்ச்சி பயிலல் நிலையத்தை கண்டி தேசிய இளைஞர் அமைப்பு நிலையத்தில் திறந்துள்ளது.

நவம்பர் மாதம் மாத்தளையில் முதலாவது நிலையத்தை திறந்திருந்ததைத் தொடர்ந்து, SSG நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு பெருமளவான விண்ணப்பங்கள் நாட்டின் கண்டிப் பிராந்தியத்திலிருந்து கிடைத்திருந்தமையினால் கண்டியை அபிவிருத்தி மற்றும் கூட்டாண்மைக்கான சுவிஸ் முகவர் அமைப்பு, பவருடன் தனியார் மற்றும் பொதுத் துறை பங்காண்மையை ஏற்படுத்தி தெரிவு செய்திருந்தது.

70 க்கும் அதிகமான மாணவர்கள் கண்டி பயிலல் நிலையத்தில் வெற்றிகரமாக இணைந்துள்ளதுடன், இரத்தினபுரி, மொனராகலை, குருநாகல், நீர்கொழும்பு போன்ற நாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களாக அமைந்துள்ளனர். தற்போது இவர்கள் கண்டி தேசிய இளைஞர் அமைப்பை அண்மித்த பகுதிகளில் தங்கியுள்ளனர். 2024 முற்பகுதியில் இரண்டாவது ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு SHMA திட்டமிட்டுள்ளது.

கண்டியில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டம் புகழ்பெற்ற ஹோட்டல்துறை நிபுணரான சாம் ராஜமந்திரினியினால் முன்னெடுக்கப்படுகின்றது. இவர் மாணவர்களுக்கு தொழில்புரியும் திறன்களைப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு பயிலல் நுட்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் கவனம் செலுத்துகின்றார். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பல ஹோட்டல்கள் நிகழ்ச்சிக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதுடன், மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கவும் முன்வந்துள்ளன. அதற்கமைய சில மாணவர்கள் ஏற்கனவே நேர்முகத்தேர்வுகளுக்கு முகங்கொடுத்து, தெரிவு சுற்றிலும் தோற்றியிருந்தனர்.

ஹோட்டல் கிரான்ட் கண்டியனில் அனுபவ பயிலல் பயிற்சிப் பயணத்தை மேற்கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், இதன்போது, ஹோட்டல் ஊழியர்கள், மாணவர்களுக்கு எதிர்காலத் திட்டங்களை மேம்படுத்தும் வகையில் வழங்கியிருந்தனர். இந்த பெறுமதி சேர்க்கப்பட்ட நேரடி ஹோட்டல் அனுபவங்களினூடாக தொழிற்பயிற்சியில் பிரவேசிக்கும் முன்னர் மாணவர்களுக்கு தொழிற்துறைசார் வெளிப்படுத்தலை பெற்றுக்கொண்டு, வெற்றிகரமாக தொழில் பயிற்சிக்கு தயார்ப்படுத்துவதாக அமைந்திருக்கும். கண்டி பயிலல் நிலையத்தில் கற்கைத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக Learning Management System (LMS)ஐ SHMA செயற்படுத்தியுள்ளது. LMS இனால் விரிவுரையாளர்களுக்கு ஒப்பற்ற முறையில் விரிவுரைகளை முன்னெடுக்கவும், முன்கூட்டியே அவர்களின் பணிகளை திட்டமிடவும், வினைத்திறனாக கண்காணிக்கவும் முடியும். மாணவர்களுக்கு மேலதிக பயிலல் அம்சங்களை தமது விரல்நுனிகளில் அணுகுவதற்கான வசதியை LMS வழங்குகின்றது. அவர்களின் தொழிற்பயிற்சியின்போது, கண்காணிக்கப்படுவர்.

கற்கை உள்ளடக்கம் என்பது Swiss Vocational Skills Development (VSD) பாடவிதானத்துக்கமைய அமைந்துள்ளது. இதில் 70% செயன்முறை விளக்கங்களாகவும், 30% புத்தகக் கல்வியாகவும் அமைந்துள்ளன.

தொடர்ந்து நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் தொழில்சார் பயிலலை மேற்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். மேலும், மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சியுடன் அணி கட்டியெழுப்பல் செயற்பாடுகள் அடங்கிய பல்வேறு மென்திறன் விருத்தி பயிற்சிப்பட்டறைகளை அணுகும் வாய்ப்பும் கிடைக்கும்.

இலங்கையில் ஏற்கனவே காணப்படும் விருந்தோம்பல் கல்விமுறையிலிருந்து மாறுபட்டதாக அமைந்துள்ள SSG நிகழ்ச்சி, பிரத்தியேகமான வழிமுறையைக் கொண்டுள்ளது. தனது 9 மாத பாடவிதானத்தில் மூன்றில் இரண்டு விடயங்கள், மாணவர்கள் மற்றும் தொழிற்துறையின் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதாக அமைந்துள்ளன. இடையீடுகளினூடாக பிரயோக பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. கற்கைநெறியின்போது, விருந்தோம்பலுடன் தொடர்புடைய பாடங்களுடன், வகுப்பறை மென்திறன் விருத்தி என்பது முக்கியத்துவம் பெறும் தலைப்பாக அமைந்துள்ளது.



# சம்பூரில் ஜல்லிக்கட்டு

தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் தலைமையில் சனிக்கிழமை (06) சம்பூரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீ முருகன் மற்றும் நடிகர் நந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நலச் சங்கத் தலைவர் ஒண்டிராஜ், செயலாளர் ராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன், இந்தியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர். இதன்போது, காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

– தமிழ்மிரர் நிருபர்கள்







# புதிய நிர்வாகக் குழு புதிய ஆண்டிலும்

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக மலையக நாடகக்கலை இலக்கிய முயற்சிகள் விளையாட்டு கலை கலாசார பாரம்பரிய அம்சங்களை பேணி வளர்த்து வரும் மலையக நட்சத்திரக் கலைப் பேரவை தனது 28ஆவது அகவையில் இவ்வருடம் (2024) கால் பதிக்கிறது. இவ்வருடத்திற்கானதும் எதிர்காலத் திட்டமிடலுக்குமான பேரவையின் பொதுக் கூட்டம் புசல்லாவை இந்து தேசியக் கல்லூரியில் தலைவர் வாசுதேவன் தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன், புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டு பதவிப் பிரமாணம் செய்யப்பட்டது.



இதன்போது, தலைவராக மலையக வாசுதேவன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அமைப்பின் செயலாளராக அதிபரும் ஊடகவியலாளருமான மருதமுத்து நவநீதனும், பொருளாளராக பாடகர் மகேஸ்வரனும், பிரதித் தலைவராக அதிபர் சந்திரமோகனும், உப தலைவராக அறிவிப்பாளர் மாரிமுத்து யோகேஸ்வரனும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அமைப்பின் உப தலைவராக கவஞர் சந்தனம் சத்தியநாதன் தெரிவானார். மாதரணித் தலைவியாக வாமதேவன் சந்திராவும், செயலாளராக எஸ்.எம்.மகேஸ்வரியும், பிரசாரச் செயலாளராக இரா.சண்முகதீபாவும் தெரிவாகினர்.

மேலும், பேரவையின் காப்பாளர்களாக தொழிலதிபர்களான ஐ.வீ.எஸ்.விஜயன், பீ.சேதுராமன் எழுத்தாளர்களான மு.சிவலிங்கம் பெ.முத்துலிங்கம் புசல்லாவை நகர வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த பெ.இராஜாராம் ஆகியோர் பேரவைக்கு வளம் சேர்ப்பதோடு, அமைப்பின் ஆலோசகர்களாகக் கல்விப் பணிப்பாளர் துரைசாமி நடராஜா, ஆசிரியர் பீ.முரளி மூத்த பத்திரிகையாளர் இரா.அ.இராமன், அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தலைவர் எம்.அன்பழகன், நயபனை முனுசாமி முத்துகுமார் ஆகியோர் ஆலோசனை சேவைகளைப் பேரவைக்கு வழங்கி வைக்கின்றனர்.







# சிரமதானம்...

"நிச்சயிக்கப்பட்ட வீட்டினை சுத்தம் செய்வோம்" என்ற தொனிப்பொருளில் சாய்ந்தமருது அக்பர் பள்ளிவாசல் மையவாடியில் OG சொசைட்டியினால் ஞாயிற்றுக்கிழமை (07) சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு OG விளையாட்டு கழகம், ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை மற்றும் இயற்கை நேசிக்கும் மன்றம் என்பன ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

– நூருல் ஹுதா உமர்







# கலாசார நிகழ்வும், பரிசளிப்பு விழாவும்

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை, விபுலானந்தா பாலர் பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் களுதாவளை கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை (06) மாலை நடைபெற்றது.

பாலர் பாடசாலை அபிவிருத்தி சங்கத் தலைவர் குணகேசரம் தலைமையில், பாலர் பாடசாலை ஆசிரியைகளான கு.கஸ்தூரி, சோ.ஸோபிகா ஆகியோரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

– வ.சக்தி

# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்தியிர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம்

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!



### பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)

**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)

**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**

### நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

### ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :............................................
மாகாணம் :......................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024
## விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர் :**..........................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை :**..........................................................................

**மாகாணம் :**..........................................................................

**வீட்டு முகவரி :**..........................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர் :**..........................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் :**..............................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

.................................................
அதிபரின் கையொப்பம்

# 10 புனிதர்களின் திருப்பண்டங்கள்

எஸ். கீதபொன்கலன்

பத்து புனிதர்களின் உடற்பாகங்கள் உள்ள திருப்பண்டங்களை உள்ளடக்கிய புராதன பேழை ஒன்று திருகோணமலை புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் புதன்கிழமை (03) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே தடவையில் பத்து புனிதர்களின் உடற்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டமை ஆசியாவிலேயே முதன்முறையாகும்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் திருகோணமலை மறை மாவட்டத்தின் சின்னக்கடை பங்கு என அழைக்கப்படும் புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தின் பங்கு குருமனையில் இருந்த இரும்பு பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்தே இந்த புனித பண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என பங்கு குருவானவர் அருட்பணி எஸ்.ஆர்.ஜெயரடணம் கூறினார்.

கண்டெடுக்கப்பட்டுள்ள புனித பண்டங்கள் பத்து, ஒரு ஆலயத்தில்,ஒரே இடத்தில் கண்டறிப்பட்டுள்ள மையானது இலங்கையிலும் ஆசியா முழுவதிலும் இதுவே முதற் தடவை என அறியமுடிகின்றது.

ஒன்று அல்லது இரண்டு புனித பண்டங்கள் மட்டுமே ஆலயங்களில் இருப்பது சாதாரண நடைமுறை என்றும் ஆனால், இவ்வாறு பத்து புனித பண்டங்கள் ஓர் ஆலயத்தில் இருப்பது தாம் அறிந்தவரையில் இதுவே முதல் முறை எனவும் பங்கு குருவானவர் கூறினார்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகமான ரோமின் வத்திகானிலிருந்து இவ் புனித பண்டங்கள் எந்த ஆண்டில் திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டது என்பது குறித்த வரலாற்றுப் பதிவுகள் எதுவும் ஆலயத்தில் இல்லை எனவும் அறிய முடிகின்றது.

மெக்சிக்கோ நாட்டின் குவாடலூப்பே என்ற கிராமத்தில் புனித மரியாள் காட்சி அளித்தமையை அடுத்து புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் அங்கு அமைக்கப்பட்டது.

போர்த்துகீசர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களால்,இலங்கையில் முதற் தடவையாக திருகோணமலை குவாடலூப்பே அன்னை ஆலயம் அமைக்கப்பட்டது.

இந்த புனித பண்டங்களை தற்போது பெருந்தொகையான கத்தோலிக்கர்களும் ஏனையோரும் தரிசித்து வருகின்றனர்.











# கிளிநொச்சியில் நூல் வெளியீடு


நடராசா கிருஸ்ணகுமார்

ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனின் சூழலியல் பத்திகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் எதிர்வரும் 13.01.2024 சனிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வணபிதா ரி.எஸ்.யோசுவா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வரவேற்புரையினை ஆசிரியர் ப.தயாளன் நிகழ்த்த உள்ளார். வாழ்த்துரையினை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நிகழ்த்த உள்ளார்.

நூல் அறிமுக உரையினை கவிஞர். சி.கருணாகரன் நிகழ்த்த உள்ளார். நூல் ஆய்வுரையினை யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பேராசிரியர் எஸ்.ரகுராம் நிகழ்த்த உள்ளார். சூழலியல் அரசியல் உரையினை ஆய்வாளர் நிலாந்தன் நிகழ்த்த உள்ளார்.




## 'தெளிவத்தை ஜோசப் கதைகள்', 'கொலுஷா'

# சென்னையில் வெளியீட்டு விழா

எஸ்.மரதன் கிருஸ்ணன்


இலங்கையின் முன்னணி சிறுகதை எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப் எழுதிய 'தெளிவத்தை ஜோசப் கதைகள்' சிங்களத்தில் சாலிய குணவர்த்தன எழுதி தமிழில் மலரன்பன் மொழிபெயர்த்த 'கொலுஷா' (பிறமொழிச் சிறுகதைகள்) ஆகிய இரண்டு சிறுகதை தொகுதிகளின் வெளியீட்டு விழா தமிழ்நாடு, டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்டபத்தில் சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (09.01.2024) காலை 09.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வெளியீட்டு விழாவில் முன்னணி கவிஞர் சல்மா முன்னிலை வகிக்க, பிரதம விருந்தினராக தமிழ்நாடு அரசின் இலங்கை தமிழர் நலன் ஆலோசனைக்குழு உறுப்பினரும், மூத்த பத்திரிகையளருமான கோவி.லெனின் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர்.ஜானகி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் குமார் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

எம்.ஜி.ஆர் ஜானகி கலை அறிவியல் கல்லூரி தமிழ்துறைத் முனைவர் மணிமேகலை வரவேற்புரையும், முனைவர் சத்தியபிரியா நன்றியுரையும் வழங்குகின்றனர்.

மலையக சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளர்களான மு.நித்தியானந்தன், எச்.எச். விக்கிரமசிங்க, கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுகுழு சார்பில் இந்நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழகத்தின் முன்னணி எழிலினி பதிப்பக கோ.ஒளிவண்ணன் ஷதெளிவத்தை 'ஜோசப் கதைகள்' என்ற தொகுதியையும், அட்டன் யூனிவர்சல் பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர், எம். மெய்யநாதன் 'கொலுஷா' என்ற தொகுதியையும் பதிப்பித்துள்ளனர்.

இவ்வெளியிட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுகுழு செயலாளர் எச். எச்.விக்கிரமசிங்க, எம்.ஜி.ஆர் ஜானகி கலை அறிவியல் கல்லூரி அலுவலக சிரேஷ்ட அதிகாரி கவிதா ஆகியோர் ஏற்பாடு செய்துவருகின்றனர். இதன் மற்றுமொரு வெளியீட்டு விழா சென்னை புத்தகக் கண்காட்சியில் வெளியிட இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.






மலரன்பன்


கோ.ஒளிவண்ணன்


குமார் ராஜேந்திரன்





தெளிவத்தை ஜோசப்



மனுஷ்ய புத்திரன்


சல்மா


கோவி.லெனின்







உத்தரப் பிரதேசம்

# அழைப்பிதழில் எழுத்துப் பிழை


உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அயோத்தியில், ராமர் கோயில் கும்பாபிஷேக விழா வரும் ஜனவரி 22ஆம் திகதி நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது. ஜனவரி 22ஆம் திகதி நண்பகல் 12.20 மணி அளவில் கோயில் கருவறையில் மூலவரான குழந்தை ராமர் சிலை வைக்கப்படுகிறது.

ராமர் கோயில் கும்பாபிஷேக விழாவில் பங்கேற்குமாறு நாட்டின் முக்கிய பிரமுகர்கள், அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது.

அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவில், நாடு முழுவதும் உள்ள பக்தர்கள் கலந்துகொள்ள அழைப்பிதழ் வழங்கும் பணி ஸ்ரீராமஜென்மபூமி அறக்கட்டளை சார்பில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ராமர் கோயில் அழைப்பிதழ் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. இந்தி மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட அழைப்பிதழ் அட்டைகள், சிவப்பு மற்றும் தங்க நிறத்தில் அமைந்துள்ளன. இந்த அழைப்பிதழில் அயோத்தி ராமர் கோயிலின் படம், ஸ்ரீ ராம ஜன்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையின் பெயர் மற்றும் சின்னம் ஆகியவை



இடம்பெற்றுள்ளன.

அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழ் தொகுப்பில் அழைப்பிதழ் அட்டை, மூலவர் பிரதிஷ்டை நிகழ்ச்சி நிரல், ராமர் கோயில் இயக்கம் குறித்த கையேடு, ஸ்ரீ ராமரின் திருவுருவம், தலைமை வகிக்கும் விருந்தினர்கள் பட்டியல் இடம்பெற்றுள்ளது. ராமர் கோயில் சிலை பிரதிஷ்டையின்போது, பிரதமர் நரேந்திர மோடி, ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத், உத்தர பிரதேச மாநில ஆளுநர் ஆனந்திப்பென் படேல் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் ஸ்ரீராமஜென்பபூமி அறக்கட்டளையின் தலைவர் நிருத்யா கோபால் தாஸ் ஆகியோர் பங்கேற்பார்கள் எனவும் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழ் தற்போது நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ராமர் கோயில் அழைப்பிதழ் தற்போது இணையத்தில் வைரலாகி வரும் நிலையில், ஆங்கில அழைப்பிதழில், “Invitation” என்பதற்குப் பதிலாக எழுத்துப் பிழையோடு, “Invitaion” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டி, நெட்டிசன்கள் பலரும் சமூக வலைதளங்களில் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். இலட்சக்கணக்கானோர் பங்கேற்கும் விழாவிற்கான அழைப்பிதழின் முகப்பிலேயே, எழுத்துப் பிழை இருப்பதை விழாக் குழுவினர் யாருமே கவனிக்கவில்லையா என கேள்வி எழுப்பியுள்ளனர்.

கேரளா

## சபரிமலைக்கு 50 முறை யாத்திரை



சபரிமலைக்கு ஒருவர் விரதமிருந்து ஒருமுறை வந்து விட்டால் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக செல்ல வேண்டும் என்ற தூண்டுதல் அவருக்குள் ஏற்பட்டு விடுகிறது.

இந்நிலையில், சிறுமி ஒருவர் 50ஆவது முறையாக இந்த ஆண்டு சபரிமலைக்கு யாத்திரை சென்றுள்ளார். கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் எழுகோன் பகுதியை சேர்ந்த அந்த சிறுமியின் பெயர் அத்ரிதி. தன்னுடைய 10ஆவது பிறந்த நாளுக்கு ஒருநாள் இருக்கும் நிலையில், அவர் தனது தந்தையுடன் சபரிமலைக்கு இருமுடி கட்டி 50ஆவது முறையாக யாத்திரை சென்றுள்ளார்.

சிறுமி அத்ரிதி ஒன்பது மாத குழந்தையாக இருந்தபோது, முதன்முதலாக சபரிமலைக்கு தனது தந்தையுடன் சென்றுள்ளார். அதன்பிறகு ஒவ்வொரு ஆண்டும் மாதாந்திர பூஜை மற்றும் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜை காலங்களில் சென்றபடி இருந்துள்ளார்.



ஆதித்யா எல்–1

## வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது

புது டெல்லி

சூரியனை ஆய்வு செய்ய இஸ்ரோ அனுப்பிய ஆதித்யா எல்-1 விண்கலம், எல்-1 புள்ளியைச் சென்றடைந்தது. புவிக்கும் சூரியனுக்கும் இடையில் சம புவி ஈர்ப்பு விசையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

சூரியனைப் பூமி சுற்றும்போது, அதற்கு ஏற்ப சூரியனை ஆதித்யா விண்கலமும் பின்தொடரும். எல்-1 என்பது பூமிக்கும், சூரியனுக்கும் இடையிலான ஒரு குறிப்பிட்ட புள்ளியைக் குறிக்கும் லாக்ரேஞ்ச் பாயிண்ட் என்ற இடமாகும். எல்-1 என்ற இடத்திலிருந்து எவ்வித குறிக்கீடும் இன்றி சூரியனை ஆராய முடியும்.

ஆதித்யா எல்-1 விண்கலம் கடந்த செப்டெம்பர் 02ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. 5 ஆண்டுகளுக்கு ஆய்வுப்பணிகளை ஆதித்யா மேற்கொள்ளவுள்ளது.

பங்களாதேஷ்

# பொதுத்தேர்தலில் வன்முறை

பங்களாதேஷில் ஞாயிற்றுக்கிழமை (07) பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில் தொடர்ந்து 4ஆவது முறையாகப் பிரதமர் ஷேக் ஹசீனா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


ஆனால், ஒரு நடுநிலை அரசாங்கத்தை நிறுவி அதன்பிறகு தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த கோரிக்கையினை பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசாங்கம் நிராகரித்தது.

இதனையடுத்து, முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. மேலும், இந்த தேர்தலைப் புறக்கணிப்பதாகவும் அக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான கலீதா ஜியா (78) அறிவித்தார்.

எனவே சட்டம், ஒழுங்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாகக் கருதி கலீதா வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் இந்தியா முழுவதும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக சிட்டகாங், காசிபூர் நகரில் வாக்குச்சாவடி மையங்களாக அமைக்கப்பட்ட 5 பாடசாலைகளுக்குக் கலவரக்காரர்கள் தீ வைத்தனர். அங்குள்ள தீயணைப்பு சேவை புள்ளி விபரங்கள்படி, கடந்த 16 மணி நேரத்தில் 14க்கும்





மேற்பட்ட தீ வைப்பு சம்பவங்கள் அரங்கேறி உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்திய எல்லையான பெனாபோலில் இருந்து சென்ற பெனாபோல் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு தீ வைக்கப்பட்டது. இதில் 4 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

இச்சம்பவத்துக்குப் பயங்கரவாதிகள் காரணமா? அல்லது எதிர்க்கட்சியின் வன்முறையில் ஏற்பட்டதா?



என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த பதற்றத்துக்கு இடையே அங்குத் தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் படகோட்ட போட்டி

கிழக்கு ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நிகழ்வில் மற்றுமோர் அம்சமாக கிண்ணியாவில் 55 படகுகளுடன் 110 போட்டியாளர்கள் பங்கேற்ற படகோட்ட போட்டி இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் வெங்கடேஸ்வரன் பங்கேற்றதுடன், படகோட்ட போட்டியை ஆளுநர் செந்தில் தொண்டமான், டாக்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் பச்சை கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

இப்போட்டியை பார்ப்பதற்கான ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் திரண்டு இருந்தனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு முதல் பரிசாக 100,000 ரூபாயும்,இரண்டாம் பரிசாக 50,000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 25,000 ரூபாயும் வழங்கி வைக்கப்பட்டது.








## செல்சி செல்லும் ஹென்டர்சன்?

சவூதி அரேபிய கால்பந்தாட்டக் கழகமான அல் எடிஃபக்கின் மத்தியகளவீரரான ஜோர்டான் ஹென்டர்சனைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி முயலலாமெனக் கூறப்படுகிறது.

நடப்புப் பருவகாலத்திலேயே இன்னொரு பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலிலிருந்து சவூதிக்கு 33 வயதான ஹென்டர்சன் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




இலங்கை எதிர் சிம்பாப்வே

## மழையால் முதற் போட்டியில் முடிவில்லை

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மழை காரணமாக இலங்கையால் முடிவைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை சரித் அசலங்கவின் 101 (95), குசல் மென்டிஸின் 46 (48), சதீர சமரவிக்கிரமவின் 41 (31), ஜனித் லியனகேயின் 24 (34) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், றிச்சர்ட் நகரவா, பராஸ் அக்ரம், பிளஸிங் முஸர்பனி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, சிகண்டர் ராசா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 274 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, டில்ஷான் மதுஷங்கவிடம் 2 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நான்கு ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 12 ஓட்டங்களைப் பெற்றிருந்ததோடு மழை குறுக்கிட்டு போட்டி முடிவில்லாமல் நிறைவுக்கு வந்தது.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## டொட்டென்ஹாம் இணக்கம் ஜேர்மனிய புண்டெஸ்லிஸ்கா

கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கிலிருந்து கடனடிப்படையில் திமோ வேர்னரைக் கைச்சாத்திடுவதற்கு டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் இணங்கியுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தை பருவகால முடிவில் நிரந்தரமாக்குவதற்கான தெரிவையும் டொட்டென்ஹாம் கொண்டுள்ளது.





## குழாமில் முஜீப்

இந்தியாவுக்கெதிரான தொடருக்கான ஆப்கானிஸ்தான் குழாமில் முஜீப் உர் ரஹ்மான் இடம்பெற்றுள்ளார்.

22 வயதான முஜீப் இவ்வாண்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடாத நிலையில் அவரின் தடையில்லாச் சான்றிதழை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை திரும்பப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குழாம்: இப்ராஹிம் ஸட்ரான் (அணித்தலைவர்), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் (விக்கெட் காப்பாளர்), இக்ரம் அலிகில் (விக்கெட் காப்பாளர்), ஹஸரத்துல்லா ஸஸாய், ரஹ்மத் ஷா, நஜிபுல்லாஹ் ஸட்ரான், மொஹமட் நபி, கரிம் ஜனட், அஸ்மத்துல்லா ஓமர்ஸாய், ஷரஃபுதீன் அஷ்ரஃப், முஜீப் உர் ரஹ்மான், பஸல் ஹக் பரூக்கி, பரீட் அஹ்மட், நவீன்-உல்-ஹக், நூர் அஹ்மட், மொஹமட் சலீம், குவைஸ் அஹ்மட், குல்படின் நைப், ரஷீட் கான்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 08, ஜனவரி 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.